Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 25    (08.5.94)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 79

## வடபகுதிக்கு கிடைத்த அன்பளிப்பு இராணுவ தேவைக்காக பறிமுதல்

வடபகுதியின் தேவைக்காக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நடமாடும் பல்வைத்திய அலகு ஒன்று இராணுவத்தினரின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வடபகுதி மக்களிற்கு நடமாடும் பல்வைத்திய அலகு மூலமாக பற்சிகிச்சை வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினால் வடபகுதிக்கு மேற்படி அலகு எடுத்துவரப்படவிருந்தது. மேற்படி நடமாடும் பற்சிகிச்சை அலகில் பற்சிகிச்சைக்கான சகல மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் அடங்கியிருந்தன. இச்சிகிச்சை அலகை வடபகுதிக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

# தங்கு நிலையற்ற தனி அரசொன்றிற்கான அத்திவாரத்தை கட்டி எழுப்பவேண்டும்!



கிளிநொச்சி மாவட்ட வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்ட சண்முகம் பாலேந்திரன் தேசியத் தலைவர் பிரபாகரனிடம் விருதினையும் சான்றிதழையும் பெற்றுக் கொள்வதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## வேளாண் மன்னர் விருது வழங்கும் வைபவத்தில் தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

''எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான்; அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு, தங்குநிலையற்றதாக, தன்காலில் தாத்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப் பெறவேண்டும் அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்ப வேண்டும்'' இவ்வாறு நேற்று முன்தினம் 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்கு செய்த இந் நிகழ்ச்சிக்கு அந்நிறுவனத்தின் பொறுப்பாளர் ரவி தலைமை தாங்கினார். இவ் விழாவில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஏனைய பொறுப்பாளர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்

இவ் வைபவத்தில் தேசிய தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின்முழு விபரமும் வருமாறு:

எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் காலத்திற்குக் காலம், நாம் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகிறோம். பெரும் துன்ப துயரங்களுக்கு முகம்கொடுத்து வருகிறோம். எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கில், சிங்களப் பேரினவாதம், எமது மக்கள்மீது, எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறது; பெரும் அநீதிகளைப் புரிந்து வருகிறது. இந்தக் கொடூரமான அடக்குமுறைகளை எல்லாம், மிகவும் துணிவுடனும், தளராத உறுதியுடனும், வியக்கத்தக்க முறையில் எமது மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள்.

## வன்னியில் புலிகள் அதிரடி
## 5 படையினர் பலி; பலர் படுகாயம்

## மக்கள் மீது தாங்கொணா சுமையை

## புதிய காவலரண் மீது தாக்குதலென அறிவிப்பு

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் மணியர் காவலரண் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்துக்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

காலை 6 10 மணியளவில் இக் காவலரணிலிருந்து 250 யார் முன்பாக தடைகளை அகற்ற வந்த 25 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீதே விடுதலைப்புலிகள் இவ் அதிரடி தாக்குதலை நடாத்தினர்.

10 நிமிடங்கள் வரை இடம் பெற்ற இத் தாக்குதலில் 5க்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். இத் தாக்குதலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இதே வேளை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அண்மையில் உருவாக்கப்பட்ட இராணுவ நிலை ஒன்றே இலக்கானதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸியின் கொ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

வன்னி மாவட்டம் மணியர் காவலரண் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | | |
|---|---|---|
| ஃ 60 எம். எம். மோட்டார் | — | 01 |
| ஃ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — | 01 |
| ஃ ரி - 56 - 1 ரக துப்பாக்கி | — | 01 |
| ஃ ரி - 56 புதிய மொடல் துப்பாக்கி | — | 01 |
| ஃ 60 எம். எம். எறிகணை | — | 16 |
| ஃ ஏ. கே. ரவைக்கூடுகள் | — | 03 |
| ஃ நடுத்தர ரவைகள் | — | 855 |
| ஃ சிறிய கிளைமோர் | — | 01 |
| ஃ வயர்றோள் | — | 01 |
| ஃ வெடிக்கவைக்கும் கருவி | — | 01 |
| ஃ தண்ணீர்க்கான் | — | 03 |
| ஃ தண்ணீர்க்கான் கோல்சர் | — | 04 |
| ஃ ஏ. கே. எல். எம். ஜி கோல்சர் | — | 01 |
| ஃ றெயின்கோட் | — | 01 |
| ஃ மில்றி பெலிட் | — | 03 |
| ஃ கிற்பாக் | — | 02 |

## மக்கள் மீது தாங்கொணா சுமையை சுமத்தியுள்ள பொருண்மிய தடைகள்

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழீழ தேசம் மீது, ஒரு திட்டமிட்ட பொருண்மிய தடையை சிங்கள அரசு திணித்துவருகிறது. தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைச் சிதைத்து அவர்களது, நாளாந்த சீவியத்தை சீர்குலைக்கும் நோக்கில் இத்தடைகள் விதிக்கப்பட்டன தமிழினம், தனதுகாலில், தனித்து வாழ முடியாது; சிங்கள தேசத்தில் தங்கிவாழ வேண்டும்,என்றநிலையை உருவாக்கி,தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்திற்கு சாவுமணி அடிக்கும் நோக்கிலும் இந்தப் பொருண்மியப் போர் தொடுக்கப்பட்டது.

இந்தப் பொருண்மியத்தடை எமது மக்களின் வாழ்நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மை. போர் அனர்த்தங்களுடன், பொருண்மிய அழுத்தங்களுமாக, எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளை தாங்கிநிற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். எனினும் இந்தப் பெரும் பளுவின் விளைவாக, எமது மக்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வும் ஏற்படத் தவறவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும் அதனால் எழுந்த பற்றாக்குறையும், அந்தப் பற்றாக்குறையால் பிறந்த தேவைகளுமாக, ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது அந்நியனின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாது, எமது மண்ணில், எமது மண்ணின் வளத்தில், நாம் தங்கிநிற்க வேண்டும் என்ற தேவையையும் உணர்ததியது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தாயக மண்ணில் பொன் விளைவித்த வேளாண்மன்னர்கள்

(யாழ்ப்பாணம்)

வட தமிழீழப் பகுதியில் கடந்த கால நெற் செய்கையில் நீர்பாய்ச்சுகையின் கீழும், மழையை நம்பிய நெற்செய்கையின் கீழும் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளிடையே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனித் தனியாக நடத்திய 'வேளாண் மன்னர்' போட்டியில் ஆறு வேளாண் மன்னர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவான இந்த 'வேளாண் மன்னர்' களுக்கு தங்கப்பதக்க பரிசும், பாராட்டு சான்றிதழ்களும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் வழங்கப்பட்டது.

அதிக விளைவு பெற்ற வேளாண் மன்னர்கள் யாழ். வன்னி, முல்லை, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து தனித்தனியாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் விபரம் வருமாறு;

**யாழ். மாவட்டம்**

திரு. கதிரவேலு சற்குணராசா தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த இவர் பி. ஜீ. 350 இன நெல்லை பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு சராசரியாக 105 புசல் விளைவு

(6ஆம் பக்கம் பார்க்க)



கதிரவேலு சற்குணராசா (யாழ்ப்பாணம்)



சண்முகம் பாலேந்திரன் (கிளிநொச்சி)



சி. சிவஞானம் (கிளிநொச்சி)



கந்தையா முத்துக்குமாரு (முல்லை)



வேலுப்பிள்ளை சிவபாதம் (முல்லை)



யே. செப் சகாயராசா பெரேரா (மன்னார்)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சபாபதி அமிர்தலிங்கம், தருமலெட்சுமி இருவருடைய அடையாள அட்டைகள் பிறவுண் வீதியில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்

(8230)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து, உடன் கண்ணாடி வழங்கப்படும். இல, 288, நாவலர் வீதி, (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8199)

### கோழி பராமரிப்பவர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கீழ்க்காணும் முகவரிக்கு 8 5 94 காலை 10 மணிக்கு நேரில் வரவும். அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

### தேவை

திருநெல்வேலியில் இயங்கும் ஆடைதயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேசியர் தைப்பதில் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும், பெண்களுக்கான நவீன ஆடைகளை வெட்டுவதிலும், தைப்பதிலும் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை 16-05 94க்குமுன் விண்ணப்பிக்கவும். விள. இல 330 மே/பா ஈழநாதம் யாழ்ப்பாணம்.

(8228)

## கமத்தொழில் புனரமைப்பு செய்திட்ட கடன்கள்

யாழ் மாவட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு கமத்தொழில் புனரமைப்பு செய்திட்டத்தின்கீழ் இலங்கை வங்கிக் கிளைகளில் கடன்வழங்கப்படுகின்றது. 31 05 1994 வரை இவ்வாறான கடன்கள் வழங்கப்படும்.

கடன் பெறுபவர் பாதிக்கப்பட்டவர் என்பதை உறுதி செய்ய வேண்டும் அத்துடன் முன்னர் கடன் பெற்றிருந்தால் அதை ஒழுங்காக மீளச் செலுத்தியிருத்தல் வேண்டும்.

ஒப்பேற்ற முடியுமான ௨ய ற்சி அபிவிருத்தித் திட்டத்தைக்காண்பிக்குமிடத்து ரூபா 10, 000/- வரை கடன்கள்வழங்கப்படும். செய்திட்டத்தின் பொருளியல் நிலை, அதிலிருந்து வரும் வருமானம், குடும்பத்தின் மொழுவருமானம், கடன் பெறுபவரின் திருப்பிச்செலுத்தும் ஆற்றல், கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தைத் தீர்மானிக்கும். இக் கடன்களுக்கான வட்டிவீதம் ஆண்டுக்கு 9 வீதம் ஆகும் என இலங்கைவங்கி மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## சுகாதார வாரத்தையொட்டி போட்டிகள் நடத்த ஏற்பாடு

(நல்லூர்)

11-06-94 தொடக்கம் 18-06-94 வரை உள்ள காலப் பகுதியில் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சுகாதார வாரத்தை முன்னிட்டு பாடசாலை, சனசமூக நிலையங்கள், இடம் பெயர்ந்தோர் முகாம்கள் ஆகியவற்றில் உள்ளோருக்கிடையில் கேள்வி பதில், சித்திரம், பேச்சு, நாடகம், கவிதைப் போட்டிகளை நடாத்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையேயான போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 21-5-94 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான போட்டிகள் 22-5-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கிடையேயான போட்டிகள் 23-5-94 திங்கட்கிழமை பி.ப. 2-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதில் பங்குபற்ற உள்ளோர் தமது விண்ணப்பங்களை 16.5.94-ந் திகதி திங்கட்கிழமை பி ப 4-00 மணிக்கு முன்னதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (17)

## களவலி மூலமான பயணம் அரச ஊழியர் நாட்டம்

அரசாங்க உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கப்பல் மூலமான பயணத்தில் ஈடுபடுவதில் சமீப நாட்களாக நாட்டமின்றிக் காணப்படுகின்றனர். வழமையாக கப்பல் மூலம் கொழும்பிற்கான பிரயாணத்தில் ஈடுபடும் இவர்கள் அண்மை நாட்களாக கிளாலி மூலமான பயணத்தையே அதிகம் விரும்புகி...

பயணத்தை மேற்கொள்கின்றனரென்று தெரிவிக்கப்பட்டது.

# யாழ். பல்கலையில் மகாபொல பரிசில் பெறுவோர் தொகை குறைகிறது

## புலமைப்பரிசில் வைபவத்தில் யாழ் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

திறமைக்கும் வறுமைக்குமான அடிப்படையிலேயே இலங்கை முழுவதும் மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளைவிட இந்த முறை இப்பரிசிற்கு தெரிவானோரின் தொகை இங்கு மிகவும் குறைந்துள்ளது இதற்குரிய காரணங்களாக இரண்டை நினைக்கத் தோன்றுகிறது ஒன்று கல்வித் தரம் குறைந்து வருகிறது அடுத்தது வறுமை நிலை மாறி செல்வந்த நிலைக்கு மாணவர் வந்திருக்க வேண்டும் என்று சிந்திக்க வைக்கிறது.

யாழ் அரச அதிபர் திரு மாணிக்கவாசகர் நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மகாபொல புலமை பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, யாழ் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் மகாபொல புலமைப் பரிசில்கள் பெறும் மாணவர்களின் தொகை படிப்படியாக குறைந்து கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது

இதற்குரிய தகுந்த நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும் இம்முறை 36 மாணவர்களே இப்பரிசைப் பெறுவதற்கு தெரிவாகியுள்ளனர் இந்நிலை தொடருமேயானால் அடுத்த அடுத்த ஆண்டுகளில் மூன்று அல்லது நான்கு பேரே இப் பரிசை பெற வேண்டிய நிலை ஏற்படும்

இப் பரிசைப் பெறும் மாணவர்களை நான் பாராட்டுகின்றேன் அறிவுள்ளவர்கள் இங்கு பலருண்டு அவர்களில் சிலரே நல்லவர்களாக இருக்கின்றனர் மாணவர்கள் அறிவுள்ளவர்களாகவும் நல்லவர்களாகவும் வளரவேண்டும்

ராக்கிங்கை கைவிட வேண்டும் எமக்கு கலாசாரமும் பண்பாடும் உண்டு இங்கு கல்வி கற்கும் பெண்களில் ஒருவர் தகாத வார்த்தையை எழுதி இன்னொரு மாணவியிடம் வாசிக்கும்படி கட்டாயப்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது இதை ஒரு பெண் எனக்குச் சொன்னார். இது எமது கலாசாரத்திற்கு உரியதல்ல.

தென்னிலங்கை பல்கலைக்கழகங்களை விட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித்தரம் மிக உயர்ந்தது என்றார்.

பதில்துணைவேந்தர் பேராசிரியர் எஸ் மகேஸ்வரன் அங்கு உரையாற்றும் போது அந்தந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அந்தந்த பல்கலைக் கழகங்களிலேயே மகாபொல பரிசிலை வழங்க முன்வர வேண்டும்

அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அந்தந்த மாவட்டங்களில் இப்பரிசிலைபெறச் செல்வதில் பல சிரமங்கள் உண்டு. மட்டக்களப்பு, திருக்கோணமலை, வன்னிப்பகுதியைச் சேர்ந்த பல மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றனர் இவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று பரிசில்களைப் பெற தற்போதைய நிலைமை பாதகமாக உள்ளது இதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.

பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் திரு, பஞ்சலிங்கம் அங்கு உரையாற்றும் போது வெட்டுப்புள்ளி ஒவ்வொரு வருடமும் உயர்கிறது ஒவ்வொரு துறைகளிலும் இது உயர்கிறது இதன்மூலம் கல்வித் தரம் இங்கு உயர்கிறது என நினைக்கிறேன்

இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வித்தரம் பாதிப்படைந்துள்ளது இந்த மாணவர்கள் உளரீதியகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளனர் இதை யாராலும் ஈடுசெய்யலாம் என நான் நம்பவில்லை

தென்பகுதி மாணவர்களின் கல்வித் தரம் உயர்ந்து கொண்டே செல்கின்றது அவர்களும் தங்கள் விகிதாசாரத்திற்குரிய இடத்தை பெற்றுக் கொள்ளத்தான் முயற்சிப்பார்கள்

பல்கலைக்கழகத்தில் வெற்றிடங்கள் இருக்கின்றன மாணவர்கள் இல்லை என்ற மாயை தோன்றுகிறது- உண்மை அதுவல்ல என்றார்-

இந்நிகழ்வின் இறுதியில் யாழ் அரசஅதிபர் திரு-மாணிக்கவாசகரும் பதில் துணைவேந்தர் திரு-மகேஸ்வரனும் மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசிற்கு தெரிவான மாணவர்களுக்கு பரிசில் வழங்கினார்கள் (தி)

## பாடசாலை வளவு மரத்தை வெட்டி விற்றார் கி. சேவகர்

சங்கானை கோட்டக்கல்வி அலுவலகத்தில் உள்ள பாடசாலை ஒன்றினுள் உள்ள மரத்தை அப்பகுதி கிராம சேவையாளர் பாடசாலை அதிபரின் அனுமதியைப் பெறாமல் வெட்டி ஏலம் போட்டு பணத்தை பெற்றுக் கொண்டார் என சம்பந்தப் பட்ட பாடசாலை உப அதிபர் சங்கானை கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் முறையீடு ஒன்றைச் செய்துள்ளார் என அறியப்படுகிறது

இப்பாடசாலை தற்போது இடம் பெயர்ந்து வேறு இடத்தில் இயங்கி வருவதாகவும் அதிபர் தனது பரீட்சை காரணமாக கொழும்பு சென்ற சமயம் பூட்டப்பட்டுள்ள பழைய பாடசாலை வளவின் பின்புறமாகச் சென்ற கிராம சேவையாளர் இம்மரத்தை வெட்டி ஏலம் போட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து சங்கானை பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட அதிபருக்கு ஏலம் விட்டுப் பெறப்பட்ட பணத்தை தம்மிடம் வந்து பெற்றுச் செல்லுமாறு இவருக்கு தெரியப்படுத்தியுள்ளார் எனவும் இதனைப் பெற சம்பந்தப்பட்ட அதிபர் மறுத்து வருவதாகவும் அறியப்படுகிறது. (17)

# வடக்கில் பெருமளவு குளங்கள் புனரமைக்கப்பட்டன

## விற்பனைக்குண்டு

ஒன்றரை மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன்நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல, 222 தெல்லிப்பழை வீதி (வட்டு இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) சித்தன்கேணி [8231]

## தவறிவிட்டது

5-5-94 அன்று பௌதிகவியல், இரசாயனவியல் (Notes) கொப்பிகள் கஸ்தூரியார் வீதிக்கும் பூநாறிமடத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி 9373)

## பூச்சித் தாக்கம்

(கொழும்புத்துறை)

அளவெட்டி கந்தரோடைப் பகுதிகளில் உழுந்து, பயறு போன்ற சிறு தானியங்களின் உற்பத்தி பூச்சித்தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (24)

றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மூலமான பயணத்தில் ஏற்படும் சிரமங்கள் தாமதங்கள் ஆகியவை இதற்குக்காரணம் என்று சொல்லப்படுவதுடன், கப்பல் பயணத்திற்கு பயணிகள் ஒவ்வொருவரும் முன்கூட்டியே யாழ் செயலகத்தில் பணத்தை செலுத்த வேண்டும் என்ற கட்டளையும் இதற்கான காரணம் என்று தெரியவருகின்றது.

நாகதேவன்துறை கடற்படை முகாம் தகர்க்கப்பட்டதாலும் சமீபகாலமாக இக் கடற் பரப்பில் கடற்படையினரின் தாக்குதல் சம்பவங்கள் இல்லாததாலும் குறிப்பிட்ட திகதியில் சிரமமின்றி பிரயாணம் செய்ய முடிவதாலும் இந்த அதிகாரிகள் கிளாலி ஊடாக கொழும்பிற்கான

## 264 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

இலவச பாடநூல் இலவச சீருடை மற்றும் மதிய உணவு முத்திரை ஆகியவற்றிற்கு வருடமொன்றிற்கு சுமார் 264 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது


Radio & Electronic

TECHNICIAN COURSE

**புதிய வகுப்புகள்**

**ஆரம்பம்**

வார இறுதி நாள் : 08 - 05 - 1994

வார நாள் : 09 - 05 - 1994

- சிறந்த இலகு விரிவுரைகள்
- கூடிய செய்முறைப் பயிற்சிகள்
- தவணைக் கட்டணங்கள்.

விபரங்களுக்கு :

North Ceylon Technical Institute.

**14, St. Peter's Lane, JAFFNA.**

(சி-9371)


தமிழீழப் பிரதேசத்தில் வசிக்கும் எந்வொரு குடிமகனைப் பொறுத்தவரையிலும் நீர்த் தேவை என்பது பிரதானமானது அன்றாட வாழ்க்கையிலே எந்தவொரு குடிமகனும் நீரின்றி செயற்படவே முடியாது ஒரு மனிதனின் வளமான எதிர்காலமே நீர் வளத்தில்தான் தங்கியுள்ளது எனவே நீரின் தேவை என்பது எமது தமிழீழப் பிரதேசத்தில் ஏறத்தாழ சகலதுறைகளையும் சிறப்பாக்க கொண்டு செல்லும் ஊடகமாகின்றது இந்த நிலையில் நாம் எமது பிரதேசத்தில் சீரழிந்து கொண்டு செல்லும் நீர் நிலைகளை பாதுகாக்க வேண்டும். அவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

தற்போது எமது தமிழீழப் பிரதேசத்திலே மழைநீரைத் தேக்கி வைத்து வழங்கக் கூடியனவாக குளங்கள், ஆறுகள், ஏரிகள் என்பன விளங்குகின்றன இத்தகைய நீர்நிலைகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டால் மாத்திரமே பயன்தர முடியும். ஆகவே இந் நீர்நிலைகள் புனரமைக்கப்பட வேண்டும். அதிமுக்கியமாக வீணாகப் பாய்ந்தோடும் மழைநீரை தேக்கி வைக்கக் கூடிய இன்றைய தேவைகளையும் எதிர்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய குளங்கள் அனைத்துமே புனரமைக்கப்பட வேண்டும்.

எமது பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் தாராளமான குளங்கள் புனரமைக்கப்பட்டு வந்துள்ளன. அந்தவகையிலே வன்னிப் பெருநிலப் பரப்பிலும் யாழ் குடாநாட்டிலும் 1991 - 1993 வரை ஏராளமான குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.

அந்த வகையில் வன்னிப் பெருநிலப் பரப்பிலும் யாழ் குடாநாட்டிலும் புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன

| | வன்னிப் பெருநிலப்பரப்பு குளத்தின் பெயர் | குள அமைவிடம் | நேரடியாகப் பயனடையும் குடும்பங்கள் |
|---|---|---|---|
| 1. | மதவாளசிங்கம் குளம் | முல்லை/தண்ணீரூற்று | 632 |
| 2. | கறுப்பி குளம் | கிளி/வட்டக்கச்சிப்பண்ணை | 29 |
| 3. | அம்பகாமம் குளம் | முல்லை/ஒலுமடு | 49 |
| 4. | புதுமுறிப்புக் குளம் | கிளி/புதுமுறிப்பு | 424 |
| 5. | மருதம் குளம் | கிளி/புத்துவெட்டுவான் | 262 |
| 6. | பெரியமடுக்குளம் (அணைக்கட்டு துப்பரவு) | மன்னார் பெரியமடு | 150 |

| | யாழ் குடாநாட்டில் புனரமைப்பு செய்யப்பட்ட குளங்களின் பெயர் | அமைவிடம் | பயனடையும் குடும்பங்கள் |
|---|---|---|---|
| 1. | பெரிய குளம் | உடுவில் | 300 |
| 2. | பெரிய நாகதம்பிரான் குளம் | உடுவில் | 100 |
| 3. | சீலம்பாய் குளம் | உடுவில் | 60 |
| 4. | பனங்காய் குளம் | சாவகச்சேரி | 125 |
| 5. | வண்ணான் குளம் | சாவகச்சேரி | 75 |
| 6. | மதாவில் குளம் | சாவகச்சேரி | 80 |
| 7. | யூதன் துரவுக்குளம் | விடத்தல் பளை | 50 |

இவ்வாறு பல குளங்கள் 1991—1992 வரை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப்பகுதியால் புனரமைப்புச் செய்யப்பட்டது. மேலும் 1993-ம் ஆண்டும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இராமநாதபுரம் குளம், கனகபுரம் குளம், பல்லவராயன் குளம், பண்டிவெட்டிக்குளம், கட்டுக்கரைக்குளம் போன்ற குளங்களும் யாழ் குடா பிரதேசத்தில் வாதரவத்தை வெள்ளப்பாதுகாப்பு அணைக்கட்டுக் குளம் என்பனவும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

எமது தமிழீழப் பிரதேசத்தில் குளப்புனரமைப்பின் போது துருசின் குறைபாடுகளை நீக்கித் தடைப்பட்ட நீர்ப்பாசனத்தைத் தொடர உதவுதல், அணைக்கட்டை வலுப்படுத்தல், அலை அரிப்பினால் குளம் உடைக்கும் அபாயத்தை நீக்குதல், குளம் ஆழமாக்குதல், குள வாய்க்கால் அருகே உள்ள பாறைகளை அகற்றுதல், குளத்திலுள்ள சேறு அகற்றி செப்பனிடுதல் என்பனவெல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன- இவ்வாறு பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வீணாகப்பாய்ந்து கடலைச் சென்றடையும் நீரைக் குளங்களிலே தேக்கி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

மேலும் எமது பிரதேசத்திலே குளங்கள் புனரமைக்கப்பட்டதால் பெரும் அழிவுக்குள்ளாக இருந்த நீர்ப்பாசன வளங்கள் பாதுகாக்கப்பட்டதோடு குளங்களில் அணைக்கட்டு வலுவூட்டப்பட்டமையால் குளத்தில் அதிக நீரையும் தேக்க முடிந்தது நெல்வயல்களையும் பெரும்போக சிறுபோக உற்பத்தியில் ஈடுபடுத்த முடிகின்றது மேலும் தற்போது குடிகளின் நெருக்கம் என்பதும் அதிகமாகவே காணப்படுகின்றது அதாவது சிறிலங்கா அரசின் இராணுவத்தின் கெடுபிடிகளாலும் தங்கள் சொந்த இடங்களில் வாழமுடியாத மக்கள் இடம் பெயர்ந்து வந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் வன்னிப் பெருநிலப்பரப்பின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர் இத்தகைய நிலையில் குளங்கள் புனரமைக்கப்பட்டு வடிகால் அமைப்புக்கள் செய்யப்பட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகின்றது

எனவே எமது தமிழீழப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் குளப்புனரமைப்பிலே இறந்ததொரு சுயசார்புப் பொருண்மியமாக இருப்பதனால் மக்கள் ஒவ்வொருவரும் ஒன்றுபட்டு இம்முயற்சியில் ஈடுபடவேண்டும் உழைக்கும் கரங்கள் எம்மிடம் இருக்கின்றன எனவே தொடர்ந்து குளப்புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் மேலும் மேலும் தற்சார்புப் பொருண்மியத்தில் முன்னேறிச்செல்லலாம்

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

யப்படுகிறது. (17)

## 2000மெ. தொன் சீனி உடன் அனுப்ப கோரிக்கை

யாழ் மாவட்டத்திற்கு மேலும் 2000 மெற்றிக் தொன் சீனியை அனுப்பிவைக்குமாறு யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்

இதற்கான வானொலிச் செய்தி ஒன்றை யாழ் அரச அதிபர் கா.மாணிக்கவாசகர் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி திட்டப் பணிப்பாளர் திரு பத்மநாதனூடாக அனுப்பிவைத்துள்ளார்

இது இவ்வாறு இருக்க தற்சமயம் 'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி சீனியும் உடனடியாக இறக்கமுடியாத நிலைதோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

இக்கப்பலின் அடியில் சீனி மூடைகள் ஏற்றப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டது

## நினைவு கூருகின்றோம்..
## 08.05.1994

1986ஆம்ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

**ரகுமான் ( . . . )**

**யூலியன் ( . . . )**

**ரகீம் ( . . . )**

1987ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலையில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**சுதா** (ஐயாத்துரை சுதாகரன் - மட்டு)

**தம்பி** (இராசமணி தவராசா -மட்டு)

மட்டு - தளவாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

**நடா** (முத்துப்பிள்ளை சந்திரன் - மட்டு)

1989ஆம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழையில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜனா** (யோகசுந்தரம் ஐங்கரன் - அலுக்கை - அளவெட்டி-யாழ்)

புங்குடுதீவில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**கந்தவேள் ( . . )**

1991ஆம் ஆண்டு வவுனியா கோழியாகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ரவி** (பாலசிங்கம் ஜெயக்குமார் பொற்பதி வீதி, கொக்குவில் யாழ்)

1993ஆம் ஆண்டு மன்னம்பிட்டி, சொருவில் பகுதியிற் சிறிலங்கா காவற்படையினர் சுற்றிவளைத்துத் தாக்கியபோது சுட்டுக் கொல்லப்பட்ட ஆதரவாளர்

**இராசதுரை ஜீவரத்தினம்** (மன்னம்பிட்டி)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9368)

அரசாங்க மரக் கூட்டுத்தாபன

# கடன்களை கட்டும் படி அமைச்சர்களுக்கு கட்டளை

## ஜனாதிபதி விஜேதுங்கா எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க மரக் கூட்டுதாபனத்திடமிருந்துமரம்கொள்வனவு செய்தவகையால் ஏற்பட்ட நான்குலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடனை கடந்தநான்கு வருடங்களுக்கு மேலாக கட்டத்தவறிய மூன்று அமைச்சர்களுக்கு அக்கடனை இரண்டு வாரத்தினுள் கட்டி விடும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

உத்தியோக பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி மேலும் கூறப்படுகையில் இரண்டு வாரங்களினுள் இக்கடன் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு தம்மிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறில்லாவிடில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்கடனை அறவிடுவது தொடர்பாக மரக்கூட்டுத்தாபனம் மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வி கண்ட பின்னரே ஜனாதிபதியின் கவனத்திற்கு இவ்விவகாரம் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

## சிறுதானிய செய்கை

தென்மராட்சிக் கோட்டத்தில் கெருடாவில், மறவன்புலவு ஆகிய பகுதிகளில் நெல் அறுவடையின் பின்னான சிறுதானியப்பயிர்ச் செய்கையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஊக்குவித்து வருகின்றனர்,

எமது சகல வளங்களையும் உச்சப்பயன்பாட்டுக்குப் பயன்படுத்தி எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து மக்கள் வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் இப்பயிர்ச் செய்கைக்கான ஊக்குவிப்பு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

## திருகோணமலை மாவட்ட கூ. சங்கம் நிதிநெருக்கடியில்

(கொழும்பு)

அரசாங்கம் கடன்களைவழங்கத் தவறுமேயானால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட வேண்டிய அபாய நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்குஇடம்பெயர்வு ற்றும் வெள்ள நிவாரணம் போன்றவற்றினால் பாதிப்புற்றோருக்கும் உலர் உணவு வழங்கிய வகையாலும் மாணவர்கள் மதிய உணவு முத்திரைக்கான பொருள்கள் வழங்கிய வகையாலும் அரசாங்கத்திடமிருந்து பலகோடி ரூபா பணம் இன்னும் வழங்கப்படவில்லை எனவும் இதனாலேயே இந்நிதி நெருக்கடி இச் சங்கங்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா நான்கு மில்லியனும், நிலாவெளி, மற்றும் குமரேசன் கடவை கூட்டுறவு சங்கங்களுக்கு முறையே 1.7 மில்லியன் ரூபா, 4.3 மில்லியன் ரூபா என்பன அரசினால் வழங்கப்பட வேண்டியுள்ளது

இந்த பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் அவலநிலை தொடர்பாக உயரதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## 31-ம் நாள் நினைவலைகள்



# விடுதலைப்புலிகள் எவரையும் ஜெயலலிதா சந்திக்கவே இல்லை

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களான அன்ரன்பாலசிங்கம் ,பொட்டு அம்மான், மற்றும் பேபி ஆகியோர் என்னைகோட்டையில்வைத்து சந்தித்ததாக வாழப்பாடி இராமமூர்த்தி கூறியிருப்பது அப்பட்டமானபொய் இதுவாழப்பாடியாரின் கொடூரமானகற்பனையாகும் இவ்வாறு தமிழக அமைச்சர் எஸ் டி சோமசுந்தரம் கூறியுள்ளார்

சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில் முதலமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் முதலமைச்சர் ஆவதற்கு முன்போ அல்லது முதலமைச்சாரகிய பின்போ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த எவரையும் எந்தக் கட்டத்திலும் சந்தித்ததோ பேசியதோ கிடையது அதற்கு அவசியமும் இருக்கவில்லை-

விடுதலைப்புலிகளின் தலைவர்களை தலைமைச் செயலகத்தில் வைத்து முதல்வர் சந்தித்து இருந்தால் அதை ரகசியமாக வைத்திருக்க முடியுமா? கற்பனைக்கும்ஒரு வரைமுறையின்றி வாழப்பாடிகூறியிருப்பதைப் பார்க்கும்போது அவரது கீழ்த்தரமான எண்ணத்தைதான் உணரமுடிகின்றது தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை ஒடுக்குவது மட்டுமன்றி மத்திய அரசையும் மீண்டும் மீண்டும் நிர்ப்பந்தித்த பின்னர்தான் மத்திய அரசு விடுதலைப் புலிகள்மீது தடை விதித்தது உலகம் அறிந்த விடயம் என்றும் தெரிவித்துள்ளார்

## ஜெயலலிதாவின் ஆட்சியை எவரும் அசைக்க முடியாது

-நெடுஞ்செழியன்

(சென்னை)

புரட்சித்தலைவி ஆட்சியை யாரும் ஆட்ட முடியாமல் அசைக்கமுடியாமல் நீடித்து வருகின்றார் என்பது தான் எதிர்க்கட்சிகளுக்கு பெருத்த ஏமாற்றம். என்ன செய்தாலும், ஏது செய்தாலும் புரட்சித் தலைவியின் ஆட்சியை அகற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் தான் எதிர்க்கட்சித் தலைவர்களை வாட்டி வதைக்கிறது. இவ்வாறு தமிழக நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தமிழக வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தின் முடிவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், தமிழ்நாட்டு அரசின் சார்பாக தாம் தாக்கல் செய்த 12-வது வரவு செலவுத்திட்டம் இது என்றும் அநேகமாக 25-வது வரவு செலவுத்திட்டத்தையும் தாமே தாக்கல் செய்யக்கூடும் எனவும் குறிப்பிட்டார்

அத்துடன் காங்கிரஸ் கட்சியினர் முறையீடு இல்லாமல் குறுக்கீடு செய்ததன் காரணமாகவும் இடையீடு செய்ததன் காரணமாகவும், வழக்கமாக 60 பேர் பேசுவது இம்முறை 31 பேர்கள்தொகை குறைந்து விட்டது எனவும் தெரிவித்தார்.

## சட்டமூலங்கள் அனைத்தும் நீதிமன்ற பரிசீலனைக்கு

– எதிர்க்கட்சிகள் கோரும்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அனைத்து சட்ட மூலங்களையும் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கவுள்ளன

வேண்டும் என்றும் தீர்ப்பளித்திருந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

## காவிரிநதி பிரச்சினைக்காக காங்கிரசார் பதவி துறப்பரா?

## தினகரன்ஆசிரியர் விடுதலை நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

சென்னையிலிருந்து வெளியிடப்படும் தினகரன் நாளேட்டின் ஆசிரியர் முத்துப்பாண்டியனை ஜாமீனில் விடுதலை செய்யும்படி சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டப்பேரவையால் தண்டிக்கப்பட்ட முத்துப் பாண்டியன் பின்னர் விடுவிக்கப்பட்டபோதும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவின் உத்தரவிற் கிசைவாக கடந்த வியாழனன்று அவர் பொலீசாரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இதனையடுத்து நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றின் அடிப்படையில் திரு முத்துப்பாண்டியன்நேற்று முன்தினமிரவு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்,

## தி முக வை ஆதரிப்பதில்லை இ. கம்யூனிஸ்டு தீர்மானம்

(சென்னை)

மைலாப்பூர் பெருந்துறை சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களின்போது தி மு. கவை ஆதரிப்பது இல்லை என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி தீர்மானித்துள்ளது

தஞ்சையில் நடைபெற்ற மாநில செயற்குழு உறுப்பினர்களின் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசிய கட்சியின் மாநிலத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ நல்லசிவன் மேலும் கூறுகையில், பெருந்துறை தொகுதியில் வலது கம்யூனிஸ்ட் கட்சி நிறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பது என்றும், மைலாப்பூரில் முற்போக்கு மனோபாவம் கொண்ட பொருத்தமான சுயேட்சை வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பது என்றும் தெரிவித்துள்ளார்.

## கட்டுப்பாடு

இரவு 7 மணிக்குபின் தேர்தல் பிரசாரத்திற்கு ஒலி பெருக்கியை பயன்படுத்தக் கூடாது என தமிழக அரசு அறிவித்துள்ளது இதற்குமேல் பயன்படுத்த விரும்புபவர்கள் எழுத்து மூலம் உரிய அனுமதியை சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடம் பெறவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## சட்டமன்றஇடைத்தேர்தலில் கூட்டணி கிடையாது

வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

மைலாப்பூர் மற்றும் பெரு

நாகர்கோவில்பயணியர் விடுதியில் செய்தியாளர்களி



## சூசைதாசன் கொட்பிறி

(புனித சம்பத்திரிசியார் கல்லூரி 11-ம் வருட மாணவன்)

இம்மையில்: 06.08.1978 | மறுமையில்: 8-4-1994

இளங்காலைப் பொழுதில் தளிராகினாய்
இளவேனிற் கால முகிலாகினாய்
நீயில்லா நாளின் கனவலைகள்
நீங்காத கானல் நினைவலைகள்
கண்ணா உன்னை நினைத்தாற
மாயைகள் பலவும் செய்தனையோ
கண்ணை மூடிக் கவிபாடி
கண்ணீரில் எம்மைத் தோய்த்தனையே

09.05.1994 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும் வீட்டுக் கிரியைகளிலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்

639, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (8225)

அன்பு அப்பா, அம்மா,
அக்காமார்,
உற்றார், உறவினர்.

---

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி

## கேள்வி கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் 24/3125 இலக்க இன்ரநஷனல் லொறியின் உடற்கோப்பு மீள் புனரமைப்பு செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-94 க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத்தபால்மூலம் ''பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல்மூலையில் 'உடற்கோப்பு மீள் புனரமைத்தல்' எனக் குறித்து அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- லொறியினை காரியாலய வேளைகளில் பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

03-05-1994.
(சி-9346)

---

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள தமது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் ஒன்று தொடர்பாக உயர்நீதிமன்றம் மூன்றிலிருபங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும் அல்லது வாக்கெடுப்பிற்கு விடப்பட

---

## - தமிழக அமைச்சர் கேள்வி

(சென்னை)

காவிரி பிரச்சினைக்காக இ. காங்கிரசின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் தமது பதவிகளை துறக்க முன்வருவார்களா என்று அமைச்சர் கு. ப கிருஷ்ணன் தமிழக சட்டப்பேரவையில் பேசும்போது சவால் விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், காவிரிப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக மாநில பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருமித்த கருத்தோடு பாராளுமன்றத்தின் முன்பாக தர்ணா போராட்டம் நடத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர் தங்கள் பதவியைத் துறக்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தனர் என்றும் தெரிவித்தார்

...லேப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் காங்கிரஸ்கட்சி அ. இ. அ. தி. மு. கவுடனோ, தி. மு. க. வுடனோ கூட்டணி எதையும் அமைக்காது என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்

...டம் பேசிய அவர் மேலும் கூறுகையில் அ இ அ தி மு கவினர் விடுதலைப் புலிகளுடன் உறவு வைத்துக்கொண்டு ராஜீவ் காந்தியையும் காங்கிரசையும் மதிக்காமல் பேசுகிறார்கள் என்றும் தி மு கவையும்விட இன்றைய ஆட்சியில் நிலைமை மிகமோசமானது என்றும் வை கோபாலசாமி அணியினரை காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாகவே இன்னமும் கருதத் தொடங்கவில்லை என்றும் தெரிவித்தார்

---

## ஒய்வூதியத்தை கணிப்பிடுதல கல்வி அலுவலகத்திற்கு

(நல்லூர்)

ஆசிரியர்களின் ஒய்வூதியக் கணக்கீட்டு வேலைகளையும், இறுதிப்படிவங்கள் தயாரிக்கும் வேலைகளையும் வலயம் 2 க்கு கீழ் உள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களே செய்யவேண்டும். இவ்வேலைகளைச் செய்வதற்கான போதியளவு ஆளணியினரையும், படிவங்களையும் வலயம் 2 வழங்க உள்ளதாக யாழ் கல்வி வலயம் 2ற்கான வலயப்பணிப்பாளர் க. கந்தசாமி கடந்த புதன்கிழமை வலயம் 2 ன் வலயப்பணிமனையில் காரியாலய உதவியாளர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இதன்படி தற்போது வலயம் 2ன் கீழ் உள்ள கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஒய்வூதியம் பெறுபவர்களின் சுயவிபரக் கோவைகளை வலயம் 2ல் இருந்து பெற்று வேலைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக ஆசிரியர்களின் ஒய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இதேசமயம் வலயம் 1ஐ ஒதிலூயக் கிளையில் அவ்வலயத்தின் கீழ் வரும் கோட்டக்கல்வி அலுவலகங்களின்கீழ் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களின் கொடுப்பனவு வேலைகள் செய்யப்படுவதாகவும் அங்கு குறிப்பிட்ட ஒரு சில ஊழியர்களே கடமைபுரிவதாகவும் மிகுந்த வேலைப்பளு இருப்பதாகவும் அறியப்படுகிறது ஆனால் புதிய சுற்றறிக்கையின்படி ஒய்வூதியக் கொடுப்பனவு வேலைகள் உரிய கோட்டக்கல்வி அலுவலர்களினாலேயே செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 17

---

## சுற்றுப் போட்டி

(வடமராட்சி)

கரவெட்டி கல்விக் கோட்டத்திலான வலைப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி எதிர்வரும்செவ்வாய்க்கிழமை நெல்லியடி வடமத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

மற்றும் இக் கோட்டத்தில் முதலாம் தவணைப் பரீட்சை சகல பாடங்களுக்குமான பகுப்பாய்வுகள் நடைபெற்று வருவதாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா தெரிவித்தார்.

யோ)

---

## திணைக்களம் இணைப்பு

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம் பிரிவு தற்போது யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(24)

---

UNIVERSITY OF JAFFNA - SRI LANKA

***External Examination*** 1992/93

FIRST IN ARTS:- 1992
FIRST IN COMMERCE

*Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination scheduled to commence in August/September 1994.*

*Examination Entry forms could be obtained from the External Examinations and Registration Unit, University of Jaffna in person or by post from 9-5-1994.*

*Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager People's Bank located in the University of Jaffna for the payment of Rs 15/- Those who wish to obtain the forms by post are required to send a money order / Postal order for 15/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs. 12/-*

*Completed Examination Entry forms should be submitted to the External Examinations & Registration unit on or before 15-06-1994.*

**Registrar,**
**University, of Jaffna.**

(சி-9369)

---

சாவகச்சேரி. ப.நோ கூ. சங்கம் சாவகச்சேரி

## வாடகை லொறி பெறுவதற்கான கேள்விக் கூற்று பெறல்

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் இடங்களில் சேவை புரிவதற்கு விரும்புபவர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-94க்கு முன்னதாக நேரில்அல்லதுபதிவுத்தபால் மூலம் ''பொதுமுகாமையாளர். ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

1. சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம் —பருத்தித்துறை துறைமுகம்
2. சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம் — யாழ் களஞ்சியம் யாழ்ப்பாணம்
3. சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம்— கோண்டாவில் களஞ்சியம்
4. சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம் — கிளை நிலையங்கள்

குறிப்பு:- சகல கிளை நிலையங்களும் சங்கத்தில் இருந்து 05 கிலோ மீற்றர் தூரம் வரையில் உள்ளது.

பொதுமுகாமையாளர்
சாவ. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

03-05-1994 (சி-9347)

# அரசியல் மயப்படுத்தினால் மலையகபிரச்சினைக்கு தீர்வு

**- பெ. சந்திரசேகரன்**

(கொழும்பு)

மலையக தொழிலாளர்களின் பிரச்சினைக்குத்தொழிற்சங்க போராட்டங்களாலோ தொழிற்சங்க நடவடிக்கைகளாலோ மட்டும் தீர்வுகண்டு விட முடியாது. இப்பிரச்சினைகள் தொடர்பாக அடி வேரிலிருந்து ஆராயப்பட வேண்டும். அரசியல் மயமாக்குவதன் மூலமே இப்பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட முடியும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் கொட்டகல பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், நான் சிறைக்குப் போகும்போது சாதாரண சந்திரசேகரனாக போனேன். சிறையில் இருந்து வெளியே வரும்போது மாகாண சபை உறுப்பினராக வந்துள்ளேன். நான் மக்களை வழி நடத்தவில்லை. மக்கள்தான் என்னை ஒரு இலக்கு நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். நான் அரசியலில் பிரவேசித்ததே எதிர்நீச்சல் போட்டுதான். எந்தத் தடைகளையும் கண்டு நான் தளர்வடையப் போவதில்லை.

இதுவரை காலமும் தற்காலிக நிவாரணங்களுக்காக மற்றவர்களை நம்பி இருந்த தொழிற்சங்கங்கள் கூட இன்று கேள்விக்குரியவைகளாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. தொழிற்சங்கங்களைச் செயலிழக்கச்செய்யும் வேலைகள் லாகவமாக அதேநேரம் உறுதியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தொழிற்சங்க ரீதியாக அல்லாமல் அரசியல் ரீதியாகவே மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

தோட்டங்கள் அரசாங்கத்தின் கையில் இருந்தபோது எமது கோரிக்கைகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தமாவது அரசுக்கு இருந்தது. தற்போது தோட்டங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டு விட்டதால் அந்த வாய்ப்பையும் இழந்து நிற்கிறோம்.

மக்களின் வேதனையைத் தணிப்பதற்காக ஒப்புக்காக உரிமை கேட்கக் கூடாது அந்த கொள்கைக்காகவே அரசியல் வேலைத்திட்டம் அமைத்து செயற்பட வேண்டும் இந்த மண் எமது மண் இது தான் நமது சந்ததியினர் வாழப்போகும் மண். இந்த மண்ணில் எப்படி வாழப் போகிறோம் என்பதை தீர்மானிக்க வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அன்பரசு, பி. எஸ். கிருஷ்ணன், திருமதி கல்யாணி, எஸ். நடேசன், மு. சிவலிங்கம், ஆர். செல்லையா ஜெயபாரதி, பீ. ஏ காதர் சரத் அத்துக்கோரளை ஏ. லோரன்ஸ், விஜயகுமார் உட்பட பலர் உரையாற்றினர்.

## சொற்பொழிவு

அறவழி இலக்கியப் பேரவை நடத்தும் இலக்கியச் சொற்பொழிவு இன்று மாலை மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தென்மராட்சி இலக்கிய முயற்சிகள் ஒரு நோக்கு என்னும் பொருளில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் அ.பொ. செல்லையா சொற்பெருக்காற்றவுள்ளார்.

## அறிமுக விழா

(குருநகர்)

இரா. நாகலிங்கம் (அன்புமணி) எழுதிய 'இல்லத்தரசி' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும்.

திரு து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் அறிமுக விழாவில் திரு. ந. சிவபாதம். கலாநிதி க. குணராசா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆகியோர் அறிமுக, கருத்துரைகளை நிகழ்த்துவர். (21)

## தற்கொலை

பொலனறுவ புலஸ்திச்சம கிராமத்தில் எம் கே. ஜி. நாளினி [வயது - 18] என்ற பெண் நச்சுக் கொட்டை சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

பசிக் கொடுமை தாங்காமலேயே அவர் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

# பொலிஸ் சித்திரவதையில் பாதிப்பு நட்டஈடு கோரி வழக்கு

(கொழும்பு)

பொலிசாரின் பயங்கர சித்திரவதைக்கு ஆளான எனக்கு நான்கு லட்சம் ரூபா நட்டஈடாகப் பெற்றுத் தரப்பட வேண்டும் என்று கோரி பிலியந்தலையைச் சேர்ந்த வாகே கொட கொடிதுவக்கு நிஹால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளார்.

மனுதாரர் 11பக்கங்களைக் கொண்ட தமது மனுவில், பொலிஸ் மா அதிபர் பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பத்து பொலிஸ்காரர்கள், சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது மனுவில் மேலும் குறிப்பிடுகையில், கடந்த மார்ச் மாதம் 4ஆம் திகதி பஸ் நிலையம் நோக்கி மோட்டார் சைக்கிளில் தமது நண்பருடன் சென்று கொண்டிருந்ததாகவும், பொரலஸ்கமுவ பொலிஸ் காப்பரண் பகுதியை அண்மித்தபோது தம்மிடம் தலைக்கவசம் இல்லாமை காரணமாக மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கியதாகவும், அப்போது தம்மை நெருங்கி வந்த சார்ஜன்ட் கொத்தலாவல தம்மிடம் அடையாள அட்டையைக் கேட்டதாகவும், குற்றம் எதுவும் புரியாத நிலையில் தாம் அவ்வாறு செய்வது அவசியமில்லை என்று தான் கூறியது பிடிக்காமையால் பொலிசார் தம்மைத் தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் காப்பரணை நெருங்கியபோது சிவில் உடையில் இருந்த பல பொலிசார் வந்து தம்மைத் தாக்கினார்கள் என்றும், தம் வசம் பொருள்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தமது கைதுக்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை என்றும் சிகரட் பழக்கம் கூட இல்லாத தம் மீது போதைப் பொருள் பாவிப்பதுகடத்தியது போன்ற அபாண்டமான குற்றச்சாட்டுகளைசுமத்த முற்பட்டதாகவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

# எதிர்வரும் தேர்தல்களில் ஐ.தே.க நிச்சயம் தோல்வி

**-லக்திவ பத்திரிகை**

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி எதிர்வரும் தேர்தல்களின் போது தோல்வியை சந்திக்கும் என்றும் இதில் எந்த ஓர் மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது தற்போது சந்தேகத்திற்கு இடமின்றி தெரிய வந்துள்ளதாக ''லக்திவ'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தோல்வியை முன்கூட்டியே அறிந்து கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்கள் தமது இரண்டாவது தலைமைத்துவத்திற்காக போட்டிபோடுவதாகவும் இதன் நோக்கம் எதிர்க்கட்சி தலைவர் பதவி என தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக தற்போது காமினி திசாநாயக்காவுக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே கடுமையான போட்டி நடைபெறுவதாக சிறி கொத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தல்களில் தோல்வியடைந்துதான் எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றால் நான்கு ஆண்டுகளின் பின் நடைபெறும் தேர்தலில் நிச்சயமாக ஐக்கிய தேசிய கட்சியை தான் வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வதாக காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் :


20 - 12 - 1931

மறைவு :

25 - 03 - 1994

கந்தையா கணபதிப்பிள்ளை

## 6-ம் ஆண்டுநினைவலைகள்



## விண்ணக வாழ்வின் 2-ம் ஆண்டுநினைவலைகள்



மண்ணில்:

01. 01. 1902

விண்ணில்:

30. 04. 1992

## பண்டைய குடியிருப்பு கண்டுபிடிப்பு

(சென்னை)

பழங்கால குடியிருப்பொன்று தஞ்சாவூருக்கு அருகேயுள்ள மேலவெளி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது நிலத்துக்கு கீழே மூன்று அடிக்கும் மேலான ஆழத்தில் கூரை மேல்ஓடுகளும் மண்பாண்ட துண்டுகளும் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்ட அவ் இடம் சோழர் காலகுடியிருப்புகளில்ஒன்றாக இருக்கலாமென தொல்பொருளியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சுயதொழில் ஊக்குவிப்புகடன்

## கந்தையா கணபதிப்பிள்ளை

குடும்பத்தின் ஒளிவிளக்கே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் உறைவிடமே அன்பாய் வளர்த்துவிட்டு
அதி விரைவாய் சென்றதேனோ?
வாழ வழி காட்டியெமை வையகத்தில் இருத்திவிட்டு
விண்ணகம் நோக்கி விரைந்தது ஏன் அப்பா?

22, சிவப்பிரகாசம் வீதி, — திருமதி செல்வரெட்னமும்,
யாழ்ப்பாணம். — பிள்ளைகளும்.

(8135)



## சங்கரப்பிள்ளை சிவவரதன் (வரதன்)

(மகாஜனாக் கல்லூரி வர்த்தகப்பிரிவு மாணவன்)

மண்ணின் மடியில்: 11-10-1969 — இறைவன் அடியில்: 08-05-1988

கல்வியிலே கலங்கரை விளக்காய்
கடமையிலே கண்ணியமாய்
குடும்பத்தின் குலவிளக்காயிருந்து
குறைவின்றி எமைக்காத்தாய்
ஆண்டுகள் ஆறானாலும் உன்பிரிவின்துயரம்
ஆறாமல் உள்ளம் தவிக்கின்றதே
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

நகுலேஸ்வராவீதி, — அப்பா, அம்மா, அக்காமார்,
கருகம்பனை, — தம்பிமார், தங்கை,
காங்கேசன்துறை (8131) நண்பர்கள், உறவினர்கள்.

## திருமதி கந்தையா மனோன்மணி

அன்னையும் தந்தையுமாயிருந்து அன்புடன் பேணிக்காத்து
மண்ணினில் நல்ல வண்ணம் வாழ்ந்திட வழியும்
காட்டிச் சென்றனை எம்மைவிட்டு சிவன்பதம்
பெரிதென்றே தாயே! உன்றன் பொன்முகம்
காண்பதெப்போ? புலம்புகின்றோம்புகலில்லாமல்

அன்னாரது பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்' உறவினர்கள்

249, பிறவுண் வீதி, — வே. க. ஏரம்பு
யாழ்ப்பாணம். — வே. க. சந்திரசேகரன்
(8226) — (மகன்மார்)

## 5ம் ஆண்டுநினைவலைகள்



மண்ணின் மடியில் 30.01.1972

ஈழத்தின் மடியில் 08.05.1989

## வீரவேங்கை ஜனா

(யோகசுந்தரம் ஐங்கரன்)

அன்பு ஜனா,

கால விருட்சம் இலை உதிர்ந்தது
...ந்து தரம்- ஆமாம் நீயும்
...ன கைக்கெட்டா மாவீரனாய்
ஆண்டுகளும் ஐந்தாச்சு
பாலும் தேனும் பாய்கின்ற நம்மீழம்
வெகு விரைவில் தனி நாடாய்க்
கோலோச்சும் அதற்காகக் காத்திருக்கும் நாங்களடா
பாலகனே உன்றன் நினைவாலே
ஈரமுற்ற விழிகளினால்
நீல வானமதில் மாவீர மீன்களுள்ளே
உனை ஒரு மீனாய்க் காண்கின்றோம்

உனதும் உன் போன்ற மாவீரச் செல்வங்களினதும்
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்,

"யோகஸ்தான்" — உன் அன்பு
அலுக்கை — அப்பா,
அளவெட்டி. — அம்மா,
08-05-1994 — சகோதரர்கள்.

(8204)

## 31ஆம் நாள் நினைவு தினம்



பிறப்பு: 1975 . 03 . 31

வீரச்சாவு: 08 . 04 . 1994

## 2ம் லெப். ஜெயந்தன்

(முத்தையா ஜெயபாலன்)

மூதூர், திருகோணமலை

களம் நோக்கிச் சென்றெதிரி
பூட்டும் விலங்குடைத்துப்
பொன் போல் விடுதலையை
மீட்டு வருவதற்காய் கடலின் மடியில்
காவியமான எங்கள் ஜெயந்தனே
நீ மரணிக்க வில்லையடா
தமிழீழ விடுதலைக்காய்
விதையாகி விட்டாய்

— குடும்பத்தினர்

சீலன்நகர், நாவற்குழி. (8223)

## ஐந்தாண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகலிங்கம் அப்பையா

(மண்கும்பான் மேற்கு)

தோற்றம் 05.08.1934 — மறைவு 01.05.1989

ஆண்டைந்து ஓடி மறைந்து போனதையா
பொங்கிவரும் துயரந்தான் மறையவில்லை
ஆசையுள்ள ஐயாவே குடும்பத்தின் ஒளிவிளக்கே
தேடுவோம், தேடியும் காணாது துயரோடு
வாடுகின்றோம்.

பிரிவால் துயருறும்
நகுலா நகை மாளிகை, — மனைவி, மக்கள்,
170 V கஸ்தூரியார்வீதி, — மருமக்கள், பேரப்பிள்ளைகள்
யாழ்ப்பாணம். (8195)

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து பொருண்மிய ரீதியில் பாதிப்படைந்த 27 பயனாளிகளுக்கு அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயதொழில் ஊக்குவிப்புக்கடனை வழங்கியுள்ளது.

அரியாலை மணியரசன் குடியிருப்பில் வாழும் தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கே ஒருவருக்கு தலா 10,000 ரூபா வீதம் இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது இதுவரை கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான சுயதொழில் முயற்சிக்கான கடனுதவிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கூட்டுறவு சங்க அங்குரார்ப்பண கூட்டம்

சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் சுழிபுரம் மேற்கில் நடைபெற்றது.
கடற்புலிகளின் பிரதிநிதியான திரு. மறவன் மாஸ்டர் மங்கள விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

திரு அ- சின்னராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் கடற்றொழில் கூட்டுறவுபரிசோதகர், கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்தி பகுதி பிரதிநிதிகள் மற்றும்அப்பகுதி பொது மக்களும் கலந்து கொண்டனர்-

இந்நிகழ்ச்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்தி பகுதியினரால் கடற்புலிகளுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியிருக்கும் கடற்றொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்காக கடற்றொழில் சங்கங்கள் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

# அகதிகள் மீது ஐரோப்பாவில் வளரும் எதிர்ப்புணர்வினால் இல. தமிழரும் பாதிப்பு

யூலை 29: இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்ந்தும் சுவிஸில் வசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். இன்றைய நிலையில் அவர்களை திருப்பி அனுப்பமுடியாதுள்ளது என அகதிகளுக்கான சமஷ்டித் திணைக்களம் தெரிவித்தது.

- பத்திரிகைச் செய்தி

யூலை 30: சுவிஸில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஆராய்வதற்காக அகதிகளுக்கான சமஷ்டித் திணைக்களத்தின் புதிய இயக்குனர் திரு. ஷீட் எக்கர் கொழும்பு செல்ல உள்ளார்.

- வானொலிச் செய்தி

ஆகஸ்ட் 04: இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படவுள்ளனர். சுவிஸில் முக்கிய ஒரு அகதிகள் பிரிவினராக உள்ள இலங்கைத் தமிழர்களின் முதலாவது குழு பத்தாண்டுகளுக்கு முன்னர் சுவிஸ் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

- தொலைக்காட்சி செய்தி

ஆகஸ்ட் 05: முதன் முதலாக இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். இது தொடர்பாக இரண்டு முதல் ஐந்து வாரங்களுக்குள் இலங்கைஅரசாங்கத் தரப்பினருடன் பேசி ஒருமுடிவு எடுக்கப்படும்.

- பத்திரிகைச் செய்தி

ஆகஸ்ட் 06 : ஆகஸ்ட் 5 ஆம் திகதி பத்திரிகைச் செய்தியின் அடிப்படையில் சுவிஸில் 8 வருடமாக வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் அகதிக் குடும்பமொன்றை மாநிலப் பத்திரிகை ஒன்று சந்தித்து எழுதியது தமிழர் தாயகத்தில் அமைதி நிலவுமாயின் உடனடியாக தாம் திரும்பிவிடுவோம் என்று அக்குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

ந்தப்பட்ட திணைக்களம் தீர்மானித்ததாக பத்திரிகை செய்தி கூறியது செய்திகளின் படி யூலை 31 ஆம் திகதி கொழும்பு பயணமான இயக்குனர் ஆகஸ்ட் 4 ஆம் திகதி நாடு திரும்பினார். இதன் பின்னரேயே டிசம்பரில் இருந்து தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த முடிவில் பெரும் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய காரணியாக இலங்கையின் அரசியல் நிலைதான் இருக்கப்போகின்றது. கடந்த யூனில் அனுப்பப்பட இருந்த அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சுமார் 50 பேர்களை அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்திற்கும் இலங்கை அரசியல் நிலையே காரணமாக இருந்திருக்கமுடியும் லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை இவற்றைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டமை, சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட தோல்வி, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் 'தற்கொலை' என்பன எல்லாம் காரணமாக அமைந்திருக்கலாம். சில வேளை டிசம்பரில் இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுவிடும் என்று சுவிஸ் தரப்பினர் இந்த முடிவிற்கு. வந்தனரா என்பதும் தெரியவில்லை.

அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை இலங்கையின் அரசியல் நிலைமை தான் தீர்மானிக்கும் என்று கொள்வோமாயின் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று கிடைக்கும்வரை திருப்பியனுப்பும் விவகாரம் எதிர்பார்க்கும் வெற்றியை அளிக்கப்போவதில்லை.

சில வேளை கணிசமான அளவு பௌதீகரீதியாக அகதிகளின் எண்ணிக்கையில் [illegible]

யும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இவ்வளவும் நடந்துகொண்டிருக்கின்ற இன்றைய நிலையிலும் சூரிஜ் விமான நிலையத்தில் இலங்கைக்குச் செல்வதற்காக காத்துக்கொண்டிருக்கின்ற எம்மவர்கள் எத்தனை பேர்? இவ்வாறான காரணங்களினால்தான் கொழும்பை பாதுகாப்பான இடம் என்று ஐரோப்பா கருதுகிறது.

எனவே இதற்கு நாங்களும் ஒரு காரணம் தான் என்பதை நாம் முகம்சுழிக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அகதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் அண்மைக் காலங்களில் பல்வேறு நாடுகளிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிற்சலாந்து, கனடா போன்ற நாடுகள் இதில் குறிப்பிடக் கூடியவை

ஆனால் இவ்வாறான கடுமையான சட்டங்களினால் அகதிகள் அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியுமா? 'படகு அகதிகள்' என அழைக்கப்படும் வியட்னாமியரும் 'ரயில் அகதிகள்' என அழைக்கப்படும் முன்னாள் யூகோசிலவியரும் பெருமளவுக்கு ஐரோப்பாவில் இருக்கிறார்கள் வியட்னாம் யுத்தம் முடிந்த பின்பும் யூகோசிலாவியாவின் சில பகுதிகள் தனி நாடாகப் பிரிந்து சுதந்திர அரசாக இருக்கின்ற நிலையிலும் கூட இன்னும் அந்நாட்டவர்கள் இந் நாடுகளில் வாழ்கின்றார்கள். ஆனால் அதே ஐரோப்பா யுத்தம் கடுமையாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையிலும் இலங்கைத் தமிழருக்கு சிங்களப் பிரதேசம் பாதுகாப்பானது. எனக் கூறுகிறது, இக் கூற்று ஐரோப்பிய ஜனநாயகத்தையும், மனித உரிமையை மதிக்கும் பண்பையும் கேள்விக் குறியாக்கியுள்ளது

அண்மையில் சுவிஸ் பத்திரிகையொன்று வெளிநாட்டவர்கள் மூலம் சுவிற்சர்லாந்து அதிகளவான பொருளாதார நலன்களைப் பெறுகின்றது என பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அகதிகளைப் பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துகின்ற நாடுகளே அதே அகதிகளை தமது பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்தி விட்டு, அவர்களைப் பார்த்து நீங்கள் அரசியல் அகதிகள் அப் பொருளாதார அகதிகள் என முத்திரை குத்துவது முறையானதல்ல.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், ஐரோப்பிய சமூக நாடுகளும் அகதிகளுக்கு உதவி வருகின்ற பொது நல அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றைக்காண முன்வரவேண்டும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, ஒல்லாந்து, போர்த்துக்கல் என்பனவற்றிற்கு இதில் அதிக பங்குண்டு. காலனித்துவ ஆட்சியின் எச்சமாகவே இன்றைய இனப்பிரச்சினை விளங்குகின்றது. எனவே சர்வதேசமே இதற்கான அரசியல் தீர்விற்கு வகை செய்ய வேண்டும், அப்போது ஈழத்தமிழ் அகதிகள் பிரச்சினையும் தீர்க்கப்பட்டுவிடும். இல்லையேல் அகதிகள் அதிகரிப்பையும் தவிர்க்க முடியாது திருப்பியனுப்புதலும் வெற்றியளிக்காது. திருப்பியனுப்புவதற்கான காலக்கெடுகள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. உளவியல் ரீதியான பாதிப்பைத் தவிர ஐரோப்பா சிந்திக்குமா?

-நன்றி: வீரகேசரி

---

சிந்தனைக்கு

எந்தக் கும்பல் பெரிதாக இருக்கிறதோ
அதோடு சேர்ந்து கூச்சல் போடுங்கள்-

— மில்ட்டர் பிக்விக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08 05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## பாதுகாப்பு முன் ஏற்பாடு

சிறிலங்கா அரசியலில் எழுந்துள்ள ஸ்திரணமற்ற நிலையானது அரசியல் எதிர்காலம் பற்றி பலரை சிந்திக்க வைத்துள்ளது. இதன் காரணமாக கடந்த 17 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு கண்களை மூடிக் கொண்டு, சட்டத்தையும் மீறி உதவி, ஒத்தாசை புரிந்தவர்கள் தற்பொழுது ஐ.தே.கவை ஆதரிப்பது பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற முற்பட்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாகவே, ஆயுதப் படையினர் தரப்பில் இருந்து வரும் சில அறிவிப்புக்கள் மற்றும் தகவல்களையும் நோக்க முடியும். அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் எந்தவொரு கூட்டத்திலும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற மேற்குப் பிராந்தியக் கடற்படை அதிகாரியின் அறிவிப்பும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களைப் பாதுகாக்கும் இராணுவமாக இல்லாமல் சிறிலங்கா அரசினதும், மக்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் இராணுவமாகவே செயற்படப் போவதாக இராணுவத் தலைமை எடுத்துள்ளதாக வெளிவந்துள்ள முடிவும் இதன் அடிப்படையிலேயே பார்க்க முடியும்.

மேலும் ஆயுதப் படையினர் தரப்பில் மட்டுமல்ல வர்த்தகர்கள், கைத்தொழில் அதிபர்கள் ஆகியோரின் போக்குகளிலும் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. பல கைத்தொழில் அதிபர்களும், வர்த்தகர்களும் எதிர்க்கட்சியினருடன் எதிர்காலம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதையும் இதன் அடிப்படையில் ஆனதே ஆகும்.

இவ்வாறானதொரு மாற்றத்திற்கு / முடிவிற்கு ஆயுதப் படையினர் வருவதென்பது அவர்களுக்கு திடீரென ஏற்பட்டகடமை உணர்ச்சியோ அன்றி, நாட்டின் மீதுள்ள பற்றோ அன்றி மக்கள் மீதான அனுதாபமோ கார

---

## 800 குற்றவாளிகள் கொலம்பியாவில் விடுதலை

(பொகோட்டா)

கொலம்பியாவில் கடந்த வார இறுதி முதல் பத்து நாள் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. கிளர்ச்சியாளர்கள் போதைப் பொருள் கடத்தல் காரர், ஏனையகுற்றவாளிகள் உட்பட 800க்கும் அதிகமானோர் விடுவிக்கப்பட்டனர். இவர்களை பாதுகாக்கவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதாக கொலம்பிய ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வாறு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தி இருப்பது இது மூன்றாவது தடவையாகும். அரசு இவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை இரண்டு மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்க அனுமதி அளிக்கலாம் இக்காலத்தில் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்கள் பற்றி [illegible] விசாரணை செய்ய முடியும்

குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட ஆறுமாதங்களின் பின்னர் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி சாட்சியங்கள் பெறப்பட வேண்டும் என கொலம்பியாவின் சட்டம் கூறுகிறது. ஆனால் இது மெதுவாகவே நடைபெறுகிறது இதனால் வழக்கொன்று நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் செல்கிறது.

அரசிற்கும் நீதி விசாரணைக் காரியாலயத்திற்கும் இடையே நிலவி வந்துள்ள பிரச்சினைகளில் கைதிகள் விடுதலை இறுதியானதாக கருதப்படுகிறது.

## கனேடிய வீரருக்கு

ளர் பற்றோ அன்றி மக்கள் மீதான அனுதாபமோ காரணம் என்று கூறிவிட முடியாது. ஏனெனில், கடந்த காலத்தில் இவர்கள் சிறிலங்கா அரசின்படைகள் என்ற நிலையினை விட ஐ. தே. கட்சியின் படைகள் என்ற ரீதியிலேயே செயற்பட்டன

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பணிப்புக்களை ஏற்றுக் கொண்ட இவ்வாயுதப் படையினர் ஐ. தே க அரசாங்கம் புரிந்த பல்லாயிரக் கணக்கான படுகொலைகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. அரச ஆயுதப் படையினர் என்ற நிலையில் இருந்துஇறங்கி சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் போன்று ஐ. தே. கவிற்குவிரோத சக்திகளை அழிப்பதில் அவை ஈடுபட்டன.

இதேபோன்றே முதலீட்டாளர்களும், கைத்தொழிலாளர்களும் ஐ தே கட்சியின் பெரும் செலவீடுகளையும் தமது செலவாக ஏற்றுக் கொண்டனர். கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுத்தனர். இதற்கு அவர்கள் அனுபவித்த சலுகைகளும், வசதிகளுமே காரணமாக இருந்தன. ஆசியாவிலேயே தனியார் மயமாக்கலில் முன்னணி நாடு என்ற நிலையை ஐ. தே. கட்சி உருவாக்கியதொன்றே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஐ தே. க. ஆட்சியில் அவர்களும் கோடி கோடியாக சேர்த்துக் கொண்டனர்.

இவ்வாறாக, ஐ தே. கட்சியுடன் சேர்ந்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தவர்களும், அதிகார வெறியில் திளைத்தவர்களும், பெரும் செல்வம் ஈட்டியவர்களும் இன்று ஐ. தே-கவுடனான உறவை குறைத்துக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் அரசியலில் மாற்றத்தில் தாம் அடிபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கியுள்ளமையையே இது காட்டுகின்றது. ஆனால், இவர்கள் எதிர்பார்ப்புக்களில் தப்பு ஏதும் இருப்பதாகவும் கூறிவிட முடியாது.

ஏனெனில், 17 வருடங்களாக எதிர்க்கட்சியாக இருக்கும் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருமானால் அது கணக்குத் தீர்க்க வேண்டியது அதிகமாகவே இருக்கின்றது. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் சிறிமாவோவின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டதில் இருந்து தென்மாகாண சபைத் தேர்தலில் பொலிஸ் அதிகாரிகள் நடந்து கொண்ட விதம் வரையும் ஒரு நீண்ட பட்டியல் உள்ளது. இதற்கு உதவக் கூடியதாக பல்லாயிரக்கணக்கானோரின் படுகொலைகள் உள்ளன. இதே சமயம் இவ்வாறு கணக்குத் தீர்த்துக் கொள்வது சிறிலங்கா அரசியலில் - சிங்களவர் அரசியலில் - புதுமையானதுமல்ல. இந்நிலையில், ஐ. தே. க. ஆட்சியில் அவர்களுக்கு சட்டத்தையும்மீறி ஒத்தாசை வழங்கிய ஆயுதப் படையினரும், முதலீட்டாளர்களும் பாதுகாப்பு தேட முயற்சிப்பது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதல்ல.

---

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் விவகாரம் ஐரோப்பாவில் சூடு பிடித்திருக்கிறது. அடிக்கடி தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதாகக் கடந்த காலங்களில் கூறிவந்த சுவிற்சர்லாந்து தான் இந்தத் தடவையும் முந்தியிருக்கின்றது. வழக்கம் போலவே தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புகின்ற முதல் நாடான ஐரோப்பாவில் சுவிஸ் இருக்கும் என்று தொடர்பு சாதனங்கள் மார்தட்டி உள்ளன.

ஐரோப்பாவில் வெளிநாட்டவர் அதிகரிப்பும், குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் இருந்து வருகின்ற அகதிகளின் அதிகரிப்பும் அண்மைக் காலங்களில் அரசியல் துரும்பாக பயன்படுத்தப்பட்டு வருவது தெரியாத விடயமல்ல. எனினும் ஐரோப்பாவில் அகதிகள் என்ற வகையில் கணிசமான இடத்தைப் பிடித்துள்ள நிறத்தால் வேறுபட்ட ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் இது இன்னும் முக்கிய விடயமாகிறது.

ஐரோப்பாவில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக வளர்ந்துவரும் கசப்பு உணர்வும், ஜேர்மனியின் நவநாஜிகளின் வளர்ச்சியும், எதிர்க்கட்சிகளின் போக்கும், வேலையின்மை போன்ற சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளும் அந்த நாடுகளின் அரசாங்கங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்திவிடுகிறது. அதே வேளை ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக ஐரோப்பாவின் பல நாடுகளும் பலசந்தர்ப்பங்களில் கவனம் செலுத்திய போதும் எந்த ஒரு நாடும் இதுவரை திருப்பி அனுப்பவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளாமல் விடமுடியாது.

கிடைக்கின்ற செய்திகளின் அடிப்படையில் அகதிகளுக்கான சமஷ்டித் திணைக்களத்தின் புதிய இயக்குனர் கொழும்பு செல்வதற்கு முன்னரே யூலை 28 இல் அகதிகளைத் தொடர்ந்து இருப்பதற்கு அனுமதிப்பதன சம்ப

திகளின் எண்ணிக்கையில் சில மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால் இதில் முக்கியமாக இருக்கப்போவது திருப்பியனுப்பும் விவகாரம் தொடர்பாக அகதிகள் மத்தியில் ஏற்படப் போகும் உளவியல் ரீதியான பாதிப்புத்தான்.

வடக்கு, கிழக்குமாகாணங்களுக்கு வெளியே பெருந்தொகையான தமிழர்கள் வாழ்கின்றார்கள். இதனால் கொழும்பு தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் எனவும், கொழும்புக்கு தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப முடியும் என்ற முடிவும் ஏற்றுக் கொள்ள முடியாதவை

அதேவேளை சுவிஸில் அகதிகளுக்கு உதவி வழங்கும், அகதிகள் நலன்காக்கும் அமைப்புகள் பலவும் பல சந்தர்ப்பங்களில் தமதுஆட்சேபனையை திருப்பி அனுப்புவதற்கு எதிராக தெரிவித்துள்ளன. மறு பக்கத்தில் சுவிஸ் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கமும் ஆட்சேபித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. கடின உழைப்பும், கீழ்ப்படிவும், நேர்மையும் கொண்ட இலாபகரமான தொழிலாளர் படையை இழக்க சுவிஸ் ஹோட்டல்கள் தயாராக இல்லை என்பதையே இது காட்டுகிறது. எது எப்படி இருந்தபோதும் சுவிஸ் அரசு ஒரு முடிவை உறுதியாக எடுக்கும் பட்சத்தில் இவ்வாறான அமைப்புகளின் ஆட்சேபங்கள் எந்தளவுக்கு செயற்றிறன் உடையவையாக இருக்கும் என்பது கேள்விக்குறியே. கடந்த காலங்களில் இங்கு கையாளப்பட்ட அகதிகள் விவகாரங்கள் இதற்கு சான்றுபகருகின்றன.

அண்மையில் பத்திரிகைகளுக்கு பேட்டியொன்றை அளித்திருந்த அரசியல் கட்சியொன்றின் செயலாளர் ஒருவர் இங்குவந்து தங்கள் நாடுகளில் பாதுகாப்பு இல்லை என்று அரசியல் தஞ்சம் கோருபவர்கள் பின்னர் தங்கள் நாடுகளுக்கு சட்டரீதியற்ற வகையில் திருட்டுத்தனமாக சென்றுவருகிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இதில் இலங்கைத் தமிழ் அகதிகளை

க்கியுள்ளது

அரசியல் அகதிகள் அதிகரிக்கும் பிரச்சினை தீர்ப்பதற்கான ஒரே வழி கடுமையான சட்டங்களோ அல்லது திருப்பியனுப்புதலோ அல்ல. அந் நாடுகளில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதுதான். அரசியல்தீர்வு ஒன்று காணப்படாத வரை அரசியல் நெருக்கடியினால் உள்நாட்டு யுத்தத்தினால் மக்கள் அகதிகளாக்கப்படுவதை எந்தச்சட்டங்களும் தடுக்கப்போவதில்லை கடந்த காலங்களில் பல நாடுகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் இவ்வாறான சட்டங்களின் பலவீனங்களை நன்கு வெளிக்காட்டியுள்ளன. அண்மையில் ஜேர்மனியில் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன விமான நிலைய அரசியல் தஞ்சம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் என சட்டம் கடுமையாக்கப்பட்டது. ஆனால் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்தில் கடந்த யூலையில் 128 அகதிகள் விமான நிலையத்தில் வந்திறங்கியுள்ளனர் இவர்களில் கணிசமானவர்கள் ஈழத்தமிழர்கள் எனவே இப்பிரச்சினைக்கு சட்டம் ஒரு பரிகாரம் அல்ல மனிதாபிமான அணுகுமுறைகளும் அரசியல் தீர்வுமே உலகில் அரசியல் அகதிகளின் அதிகரிப்பை தவிர்க்க முடியும்.

இந்தியாவில் இருந்த தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்பட்ட விவகாரத்தைத் தான் சுவிற்சர்லாந்தும் மற்றைய நாடுகளும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தியா அரசியல் தஞ்சம் வழங்குகின்ற ஒரு நாடல்ல. எனவே மனிதாபிமான அடிப்படையில் அகதிகளை ஆதரித்த இந்தியா பின்னர் பல அரசியல் பின்னணியில் அகதிகளை திருப்பி அனுப்பி உள்ளது. ஆனால் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சாசனத்தின் அடிப்படையில் அரசியல் தஞ்சம் வழங்கும் நாடுகளாக உள்ள நாடுகளே இந்தியாவை உதாரணம் காட்டுவது எந்த வகையிலும் ஏற்புடைய ஒன்றல்ல.

---

## சிறைவாசம் விதிப்பு

(ரொரன்ரோ)

சோமாலியர்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட கனேடிய படை வீரர் ஒருவருக்கு 90நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ நா நிவாரண உதவித் தூதுக்குழுவில் அங்கம் வகித்த இந்த கனேடிய வீரர் சோமாலிய இளைஞர் ஒருவரை கடுமையாக தாக்கியதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இராணுவ சிறையில் தண்டனை அனுபவிக்க வேண்டுமென பணிக்கப்பட்டுள்ள கனேடிய பராதுருப்பு வீரர் அவர் இழைத்த குற்றத்திற்காக பதவி இறக்கப்பட்டுள்ளார்.

16வயது சோமாலிய இளைஞன் கனேடிய தங்கு விடுதியில் இரகசியமாக நுழைந்தபோது கைதானார்இவர் பின் மூன்று மணி நேரங்களில் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்சீர்திருத்தமசோதா அடுத்த வாரத்தில் வரும்

.வி சி சுக்லா

(டில்லி)

தேர்தல் சீர்திருத்த மசோதா அடுத்த வாரத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருப்பதாக பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வி.சி.சுக்லா கூறியுள்ளார்.

புதுடில்லியில் பாரதீய ஜனதா, அ. இ அதி முக ஜனதள் தெலுங்குதேசம், தி.மு க ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற விவகார அமைச்சரை சந்தித்துப் பேசியபோது இது தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

1994-05-08. ஞாயிறு இரவு

8. 01 ற்கு-இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் வி. கே. ராஜரட்ணம்

8 30 ற்கு - செய்திகள்

8 40 ற்கு- தொடர் நாடகம் "இலங்கை மண்" 24ஆம் அங்கம்

1994-05-09 திங்கள் காலை

7. 02 ற்கு- மாவீர வணக்கம்

7. 15 ற்கு- மணி ஆரம்

7. 30 ற்கு- செய்திகள்

7. 35 ற்கு- பத்திரிகைச் செய்திகள்

7. 40 ற்கு- தாயகப் பாடல்கள்

## வெளிநாட்டவர் வெளியேற்றம்

(சானா)

யேமன் நாட்டில் அதிபர் அலி அப்துல்லா சாலேக்குவிசுவாசம் தெரிவிக்கும் படையினருக்கும், துணை அதிபர்அலி சலன் அல்பெய்ட்டின் படைகளுக்கும் இடையே சண்டைகள் வலுத்து வ[illegible]தாகக் கூறப்படுகிறது. இதனால் சுமார்ஐநூறுக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் அங்கிருந்து பிரெஞ்சுக் கப்பல் ஒன்றின் மூலம் வெளியேறியுள்ளனர்.

யேமன் கடற்பகுதிக்கு அப்பால் நின்ற போர்க்கப்பல் ஒன்றில் பிரெஞ்சு, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பிரஜைகள் கொண்டுவந்து பாதுகாப்புடன் ஏற்றப்பட்டதாக பிரான்சின் பாதுகாப்பு அமைச்சு பாரிசில் தெரிவித்துள்ளது,

# மன்னார்த் தீவில் புலிகள் தாக்குதல் இரு பொலிசார் பலி; ஐவர் காயம்

## ஐவரைக் காணவில்லை என அரச தரப்பு அறிவிப்பு

(மன்னார்)

மன்னார்த்தீவில் பொலிஸ் நிலையம் ஒன்றின்மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டிற்கும் மேற்பட்டபொலிசார் பலியாகினர். ஏனையோர் தப்பியோடினர். இவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

கடந்த மாதம் 29ஆம்திகதி இராமையங்கல் என்ற இடத்தில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற திடீர் மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் பாலையா, கப்டன் மில்டன் ஆகிய போராளிகளின் நினைவாகவே இத்தாக்குதல் நடைபெற்றது.

நேற்று அதிகாலை 12.10 மணியளவில் மன்னார் தீவில் பள்ளிமுனையில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். 20 நிமிடங்களினுள் பொலிஸ் நிலையம் முற்றாக விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப் பட்டது. இத் தாக்குதலில் இரண்டிற்கும் மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பிஓடி விட்டனர்.

இதேவேளை மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததில் இரு பொலிசார் பலியானதாகவும் ஐந்து பொலிசார் படுகாயமடைந்ததாகவும் மேலும் ஐந்து பொலிசார் காணாமற்போய் விட்டதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

# பள்ளிமுனை பொலிஸ் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் பள்ளிமுனை பொலிஸ் நிலையம்மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அங்கிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஃ 203 பிஸ்டல் | 01 | ஃ பராலைற் | 02 |
| ஃ ரி - 56 - 1 துப்பாக்கி | 01 | ஃ ஏ. கே. கோல்சர் | 01 |
| ஃ ஏ. கே. ரவைக்கூடு | 07 | ஃ ஏ. கே. எல். எம் ஜி கோல்சர் | 01 |
| ஃ ஜே ஆர். கைக்குண்டுகள் | 08 | ஃ தண்ணீர்க்கான் | 09 |
| ஃ ஐ. எம். ரவைகள் | 6452 | ஃ றெயின்கோட் | 10 |
| | | ஃ இராணுவ சப்பாத்து சோடி | 10 |
| | | ஃ இராணுவத் தொப்பி | 01 |
| | | ஃ பரட் தொப்பி | 01 |
| | | ஃ இராணுவப் பட்டி | 01 |

**...ாயக...**

பெற்று 1993 - 1994 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்டார்

**கிளிநொச்சி மாவட்டம்**

திரு. சண்முகம் பாலேந்திரன் பண்டிசுட்டான் கண்டாவளையை சேர்ந்த இவர் பி. ஜீ. 500-1 இன நெல்லை நீர்பாய்ச்சுகை நெற்செய்கையின் கீழ் பயிரிட்டு 165-7 புசல் நெல்லை ஒரு ஏக்கருக்கு சராசரி விளைவாக பெற்று 1993-94ஆம் ஆண்டின் கிளிநொச்சி வேளாண் மன்னராக தெரிவானார்.

திரு. சி. சிவஞானம் இராமநாதபுரம் கிளிநொச்சியை சேர்ந்த இவர் மழையை நம்பிய பயிர்ச் செய்கையில் ஏ.ரி 51 இன நெல்லை பயிரிட்டு 174.64 புசல் விளைவினை சராசரியாக பெற்று வேளாண் மன்னர் விருது பெறுகிறார்.

**முல்லை மாவட்டம்**

திரு, கந்தையா முத்துக்குமாரு இறம்பைக்குளம் நெடுங்கேணியை சேர்ந்த இவர் பி டபிள்யூ 351 இன நெல்லினை நீர்ப்பாய்ச்சுகை நெற் செய்கையில் பயிரிட்டு

## வீரச்சாவு



**-லெப். மதிமகன்**

நேற்று அதிகாலை மன்னார்த் தீவிலுள்ள பள்ளிமுனை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். மதிமகன் (மாணிக்கராஜா அன்ரனி சிலாவத்துறை முருங்

**...ன்னியில**

...மூப்புச் செய்தியாளர்ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். செட்டிக் குளத்தில் மேற்கொள்ளப் பட்ட படையினரின் ஒபரேஷன் ஜயமக இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து புலிகள் இத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத் தாக்குதல் இராணுவத்தினரை கவலைக்குள்ளாக்கும் தாக்குதல் எனவும் 10 தினங்களுக்கு முன்பே இப் பகுதியில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பி- பி- ஸி கருத்து தெரிவித்தது.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் இவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

# இடைக்கால அமைச்சரவை குறித்து டி. பி. விஜேதுங்கா தீவிர பரிசீலனை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து தனது கோரிக்கையை நிறைவேற்ற தயங்கினால் உடனடியாக பாராளுமன்றத்தை கலைத்து ஓர் இடைக்கால அமைச்சரவையிடம் ஆட்சியை ஒப்படைப்பது தொடர்பாக ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிய வருகின்றது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் பலர் இவரின் வேண்டுகோளை தொடர்ந்து தமது பதவிகளை இராஜினாமா செய்ய மறுத்துள்ளதைத்தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுப்பது பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப் படுவதாகத் தெரிய வருகிறது.

சிறிலங்கா அரசியல் யாப்பின் கீழ் மேற்படி அமைச்சரவை தமது ஆட்சியின் கீழ் தொண்ணூறு நாட்கள் அதாவது மூன்று மாதகலம் நடத்தலாம் என்றும் எனவே அவர் இவ்வாறான நடவடிக்கையில் மிக விரைவில் ஈடுபடுவார் என்றும் அதற்கான அமைச்சரவை மிக விரைவில் உருவாக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

## ஹேமா உட்பட நால்வருக்கு மந்திரிப்பதவி கிட்டும்?

புதிய நான்கு பேருக்கு விரைவில் அமைச்சர் பதவிகள் வழங்க இருப்பதாவும் தற்போது அவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக்கும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களான காமினிதிசநாயக்கா, றொனி டிமெல், ஜயவிக்கிரம பெரேரா மற்றும் திருமதி ஹேமா பிரேமதாசா ஆகியோருக்கு மேற்படி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட விருப்பதாக தெரிய வருகின்றது.

## விசுவாசமானவர்களை பதவியிலிருத்த டி.பி. முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தனக்கு விசுவாசம் உடையவர்களை வைத்திருப்பதன் மூலம் தனது பலத்தை பாராளுமன்றத்தில் நிலை நாட்ட ஜனதிபதி டி. பி விஜேதுங்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் தனக்கு விசுவாசம் உடையவர்களை நியமனம் செய்வதில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி பாராளுமன்றத்திலும் இவ்வாறான நிலையை ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை கட்சியை வெளியே இருந்து விமர்சிப்பவர்களுக்கு கட்சியில் முக்கிய பதவி வழங்குவதன் மூலம் இவர்களின் விமர்சனத்தை இல்லாதொழிக்க முடியும்என கருதப்படுவதாக தெரியவருகின்றது என அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

# எதிரணியின் வேட்பாளர் பொறுத்தே ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர்தெரிவு

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரைப் பொறுத்தே ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் நியமிக்கப்படுவார் என 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்,

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடுவாராயின் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா போட்டியிடுவார் என்றும், பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் காமினி திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனால் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு மேற்கொண்ட பின்னரே ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது முடிவு செய்யப்படும் என அவர் மேலும் கூறினார்.

# இத்தாவிலில் பஸ் விபத்து 10 பயணிகள் காயம்

சாவகச்சேரியில் இருந்து பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்று மாலை 4 00 மணியளவில் விபத்திற்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த சுமார் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் படுகாயமடைந்த இருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மு. தனேந்திரன் (20 வயது, பளை), துரட்ணம்(28வயது, ஐந்துசந்தி யாழ்) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

அந்த மினிபஸ்பயணிகளுடன் சாவகச்சேரியில் இருந்து புறப்பட்டு பளை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் இத்தாவில் என்னும் இடத்தில் பின் ரயர் வெடித்ததினால் விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு பாலசிங்கம்

காரைநகர் களபூமி, வளுப்போடையைப் பிறப்பிடமாகவும் 54 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் அரசாங்க ஒப்பந்தக்காரர் முருகேசு பாலசிங்கம் 7 5-1994 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை முருகேசு - காசுபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், (காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை, கந்தையா) மற்றும் சபாரத்தினம், திருமதி அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், (காலஞ் சென்ற கந்தர், பொன்னம்பலம், தில்லையம்பலம்) ஆகியோரினதும், காலஞ் சென்ற பொன்னம்மா, சுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துன

## தங்கு நிலையற்ற......

# உழைக்கும் எம்மக்களின் உதிரத்தால்

திரு, [illegible] மாரு இறம்பைக்குளம் நெடுங்கேணியை சேர்ந்த இவர் பி டபிள்யூ 351 இன நெல்லினை நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையில் பயிரிட்டு சராசரி 176.4 புசல் ஏக்கர் ஒன்றுக்க ன விளைவாகப் பெற்று இம்மாவட்டத்தின் வேளாண் மன்னராக தெரிவாகினார்.

திரு. வேலுப்பிள்ளை சிவபாதம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இவர் மழையை நம்பிய நெற்செய்கையில் பீ, ஜீ. 500-1 இன நெல்லினை பயிரிட்டு ஏக்கர் ஒன்றிற்கு 103 9 புசல் விளைவை பெற்று இம்மாவட்டத்தின் வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**மன்னார் மாவட்டம்**

திரு, யோசப் சகாயராசா பெரேரா கற்கிந்தகுளத்தைச் சேர்ந்த இவர் நீர்பாய்ச்சுகை நெற்செய்கையின் கீழ் பீ. ஜீ. 11-11 இன நெல்லை பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு சராசரியாக 188.75 புசல் விளைவு பெற்று மன்னர் மாவட்டத்திற்கான வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

[illegible] முனை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். மதிமகன் (மாணிக்கராஜா அன்ரனி சிலாவத்துறை முருங்கன் மன்னார்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். வீரச்சாவைத் தழுவிய மதிமகனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடபகுதிக்கு

எடுத்து வருவதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர் அத்துடன் இச்சிகிச்சை அலகை தடுத்து வைத்து தற்பொழுது தமது தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அனுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு மேற்படி சிகிச்சை அலகு பயன்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க, நி)


**யாழ் ஸ்ரீதரில்...**

**தினசரி மாலை 4, 6 மணி**
**சனி, ஞாயிறு காலை 10.30**
**மாலை 4, 6 மணி**

**காற்றுவெளி**

(சி-9370)


தங்கு நிலையற்ற......

# உழைக்கும் எம்மக்களின் உதிரத்தால் மறுமலர்ச்சி கண்ட பொருளாதாரம்

இந்த விழிப்புணர்வு எமது மக்களின் உழைப்பாற்றலை முனைப்புறச் செய்தது. உழைக்கும் மக்களின் உதிரத்தால் உரமூட்டப்பட்டு எமது தேசிய பொருளாதார வாழ்வு என்றுமில்லாத மறுமலர்ச்சி கண்டது. நெல் உற்பத்தி, பனைவள உற்பத்தி, கடல்வள உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தியாக, இன்று பல்வேறு துறைகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டுவருகிறது. எமது மக்களின் அயராத உழைப்பிற்கும், தளராத உறுதிக்கும் சான்றாக, இன்று எமது தேசிய பொருளாதாரம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க முனைகிறது எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை, பதிலாக எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான், அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு, தங்குநிலையற்றதாக, தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப்பெறவேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்பவேண்டும்.

# இயற்கையின் வளங்களை கொண்டு உச்சப் பயன்பாடு பெறவேண்டும்

தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய நீர்வளத்தையும், நிலவளத்தையும், மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு அவற்றை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமாணத்திற்கு அடித்தளமானது. தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆக்கபூர்வமான பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. இந்த முயற்சிகள் வெற்றி பெற எனது ஆசிகள்.

உழைக்கும் மக்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது இதன் ஒரு முக்கிய அம்சமாக, வேளாண்மைத்துறையிலும் போட்டியை நிகழ்த்தி, 1993 - 1994-ம் ஆண்டிற்கான 'வேளாண் மன்னர்களை' தெரிவு செய்திருக்கிறது. எமது தாயக மண்ணில் பொன் விளைவித்து, அபாரமான சாதனை ஈட்டிய உழவர்களுக்கு, 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மதி அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், (காலஞ்சென்ற கந்தர், பொன்னம்பலம், தில்லையம்பலம்) ஆகியோரினதும், காலஞ்சென்ற பொன்னம்மா, சுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் தியாகலிங்கம், சற்குணநாதன் - வசந்தகுலநாயகி சரோசினிதேவி ஆகியோரின் பெரிய தகப்பனாரும், வசந்தகோகிலம், பாலேந்திரன் இராசமலர், யோகேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்; அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 8-5-1994 ஞாயிறு பி, ப. 2. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல்மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராசம்மா
(மனைவி)

54, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(8233)

## ஆனந்தராசா நந்தகுமாரி

அல்வாய் வடக்கு வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த ஆனந்தராசா நந்தகுமாரி காலமானார். இவர் வல்லிபுரம் ஆனந்தராசா, சரோசினிதேவி ஆகியோரின் அன்பு மகளும், ஆனந்தகுமார் (டோபா), சந்திராதேவி, ரதீஸ்குமார், உதயகுமாரி, ரஜனிகுமார், ராஜ்குமார், சசிகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-5-94 இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று, பருத்தித்துறை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
வ. ஆனந்தராசா
(குழாய் கிணறு அமைப்பாளர்)
தந்தை

வீரபத்திர கோயிலடி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(8232)


# வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே தம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.